# இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1:2:1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS) இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 17 ஆம் பகுதி | ஆதனங்கள், பொறி, உபகரணங்கள் என்பன மீள்பெறுமதியிடப்படுமாயின் உரிய சொத்துக்களைச் சார்ந்த தொகுதியின் சகல ஆதனங்கள், பொறி, உபகரணங்கள் என்பன மீள்பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதிகாரசபையிடமுள்ள சகல காணிகளும் கட்டிடங்களும் மீள்பெறுமதியிடப்படாது, தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியும் கட்டிடங்களும் மாத்திரம் மீள்பெறுமதியிடப்பட்டு ரூபா 1,378 மில்லியன் தொகையான |

மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. ஏனைய காணிகளும் கட்டிடங்களும் மீள்பெறுமதியிடப்பட்டிராமையால் அதிகாரசபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 ஆம் பகுதி — செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள், அவற்றின் தன்மையின் படி குத்தகைக்கு வழங்குனரின் நிலைமைக் கூற்றில் காண்பிக்க வேண்டும். எவ்வாறெனினும், செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்டிருந்த காணிகளும் சுற்றுலா விடுதிகளும் அதிகாரசபையின் நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. சான்றுகளுடன் அக் காணிகளின் சுற்றுலா விடுதிகளினதும் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அறவிடப்பட வேண்டிய கடன்களின் தன்மை மற்றும் அறவிடப்படும் இயலுமை தொடர்பாக கருத்தில்கொள்ளாது ஐயக்கடன் ஏற்பாட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை அறவீடு தாமதமாகக் காணப்பட்ட கடன்பட்டோருக்காக 25 சதவீதம் முதல் 100 சதவீதம் என்ற வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. இக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட கால மற்றும் குறுங்கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணிகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து அறவிடப்படுகின்ற குத்தகை சதவீதத்தைத் தீர்மானிப்பதற்குரிய கொள்கை கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

உரிய துணைப்பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடப்பட்டிராமையால் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுக்கும் துணைப்பதிவேடுகளுக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | நிதிக்கூற்றுக் களின் படியான மீதி | துணைப்பதிவேடு களின் விபரம் | துணைப் பதிவேடு களின படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| இலங்கை மாநாட்டு பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் | 26,848 | இலங்கை மாநாட்டு பணியகத்தின் நிதி நிலைமைக் கூற்று | 20,170,673 | 20,143,825 |
| இலங்கை ஹொட்டேல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் | 6,511,960 | இலங்கை ஹொட்டேல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் நிதி நிலைமைக் கூற்று | 61,337,342 | 54,825,382 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திடமிருந்து பெறவேண்டிய பணம் | 26,948,539 | இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் நிதி நிலைமைக் கூற்று | 24,371,042 | 2,577,497 |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,978,954 தொகை 4 ஆண்டுகளுக்கு மிகையான காலமாகவும் ரூபா 96,514 தொகை 3 ஆண்டுகளுக்கு மிகையான 4 ஆண்டுகளுக்குக் குறைவான காலமாகவும் நிலுவையாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக ரூபா 1,748,633 தொகையான நானாவித கடன்பட்டோர் 4 ஆண்டுகளுக்கு மிகையான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காணப்படும் முதலீட்டு வகைப்படுத்தலின் பிரகாரம் அவறிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்படாமையால் அம் முதலீடுகளை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

| முதலீட்டு வகைப்படுத்தல் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| பெறுமானத்தேய்வு முதலீடு (சுற்றுலா சபை) | 52,154,737 | (i) முதலீட்டுச் சான்றிதழ் அல்லது வேறு எழுத்துமூல ஆவணங்கள் |
| பெறுமானத்தேய்வு முதலீடு (சுற்றுலா மேம்பாடு) | 976,509 | (ii) மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| தேங்கு நிதியம் | 759,021 | |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஹொட்டேல் சுற்றுலா கம்பனி | 750,000 | (i) பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு எழுத்துமூல ஆவணங்கள் |
| | | (ii) மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் |

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை அதிகாரச்சட்டம் | |
| (i) I ஆம் அத்தியாயத்தின் 12(4)(iii) ஆம் பிரிவு | தனியார் ஹொட்டேல் ஒன்றிற்கு இலங்கை வங்கியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன்தொகைக்குரிய வட்டியில் ரூபா 6,290,068 தொகை அதிகாரசபையால் செலவிடப்படுவதற்கான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) I ஆம் அத்தியாயத்தின் 7(3) ஆம் பிரிவு | மேற்குறித்த கடன் வட்டியை அதிகாரசபையால் மேற்கொள்வதற்கு 2010 யூன் 6 ஆம் திகதி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பணிப்பாளர் சபை அங்கத்துவ எண்ணிக்கை 5 ஆன பெரும்பான்மை இருக்கவில்லை. |
| (ஆ) 1995 யூலை 12 ஆம் திகதிய சனாதிபதி செயலாளரால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிச் சுற்றறிக்கை | அரச காணிகள் குத்தகைக்கு வழங்கப்படுகையில் குத்தகை உடன்படிக்கையும் குத்தகைத் தொகையும் 5 ஆண்டுகளுக்கு 5 ஆண்டுகள் திருத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் குத்தகைக்கு வழங்கப் பட்டிருந்த காணி தொடர்பாக இச் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீ.ஈ.டீ. 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 9 ஆம் அத்தியாயத்தின் 9.3.1 (i) ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள் கட்டுப்பாட்டுச் சபையாலும் அமைச்சினாலும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் ‘‘வன் ஸ்டொப் யூனிட்’’ எனும் பெயர்கொண்ட பிரிவுக்கான ஆட்சேர்ப்பு இந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9 ஆம் அத்தியாயத்தின் 9.14.1 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவத்திற்கான சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பான சகல விடயங்களும் உள்ளடக்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட அத்தியாயத்துடனான வழிகாட்டிக் கோவை திறைசேரிச் செயலாளரின் இணக்கப்பாட்டுடன் கட்டுப்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை அத் தேவைப்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 30 மில்லியன் ஐ.அமெ.டொலர்களுக்கு மிகையான வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தும் ஒரு செயற்திட்டத்தின் பதவியணிக்காகச் செலுத்தப் படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட சம்பளங்களை மிகைத்து கற்பிட்டிச் செயற்திட்டம் ஒன்றின் பதவியணிக்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2011 திசெம்பர் 31 வரை ரூபா 3,780,253 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 183,037,093 மிகையானதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 132,206,537 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 50,830,556 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. ரூபா 61,771,573 தொகையால் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் உள்வரவு வரியும் ஏனைய வருமானங்களும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு அடிப்படைக் காரணங்களாகக் காணப்பட்டன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் வருமானம் ரூபா 406 மில்லியன் தொகையானதுடன் இது முன்னைய ஆண்டின் ரூபா 345 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 17.6 சதவீதத்தால் அதிகரிப்பைக் காண்பித்தது. இவ்வாறே முன்னைய ஆண்டில் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 213 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 223 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 4.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டு தோறும் ரூபா 80 மில்லியனுக்கு மிகையான பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாது வங்கிக் கணக்கில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விடுதிகளின் செயலாற்றல்

அதிகாரசபையின் உரிமை மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் 04 விடுதிகளும் 03 விடுமுறை விடுதிகளும் காணப்பட்டன. 2011 ஆம் ஆண்டின் போது இவ்விடுதிகளின் தேறிய மிகையான ரூபா 5,355,575

தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான தேறிய திரண்ட மிகை ரூபா 13,080,510 ஆகக் காணப்பட்டது. கூடுதலான பொதுச் செயற்பாட்டுச் செலவினம் காரணமாக ஒரு விடுமுறை விடுதியில் ரூபா 12,012,571 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது. இதன் விளைவாக உழைக்கப்பட்டிருந்த மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் விடுதிகளின் செயற்பாடுகளில் ஒட்டுமொத்த இலாபம் 16.4 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்கு மீளாய்வாண்டில் அல்லது இதுவரையில் எய்தப்பட முடியாதிருந்த நோக்கங்களும் இலக்குகளும்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களும் இலக்குகளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

(i) நீண்ட கால இலக்குகள் மற்றும் மூன்றாண்டு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் வருடாந்த புதிய நீண்டகால இலக்குகளை உள்ளடக்கும் நோக்கில் திருத்தங்கள் செய்து இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்.

(ii) அதிகாரச்சட்டத்தில் உறுதியாகக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் விதிகளைத் தயாரிப்பது, இதன் மூலம் சுற்றுலாத் தொழில் மற்றும் அதுசார்ந்த ஏனைய தொழில்களுக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை மேம்படுத்தல், வலுப்படுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக சுற்றுலா தொழில்முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கி அதிகாரத்தை வழங்குதல்.

(iii) அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தைக் குறியாகக் கொண்டு வகதிகளை ஏற்படுத்துவதற்காக சாதாரண அல்லது ஏனைய சபையை ஸ்தாபித்தல்.

(iv) இலங்கையில் உள்ள சுற்றுலாப் பயணிகளின் மனம் கவர்ந்த இடங்களைச் சென்று பார்வையிடும் நபர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் தொழிலை மேற்கொள்ளல்.

**3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

(அ) காணி மற்றும் ஆதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திருகோணமலை குச்சவெளிப் பகுதியில் இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரசபையினால் கையேற்கப்பட்ட 510 ஏக்கர் அளவிலான காணியில் மீளாய்வாண்டின் இறுதி வரை 50 ஏக்கர் அளவிலான காணியை மாத்திரமே அபிவிருத்தி செய்வதற்கு அல்லது முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) அடிப்படைக் கட்டுப்பாட்டு முறையாக ஆதனங்களின் உறுதி கைமாற்றம், சேர்ப்பனவு, மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற விபரங்கள் குறிப்பிட்டு காணி மற்றும் சொத்துக்களுக்காக ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் படி, 56 விடுதிகளும் 6,495 ஏக்கர் விஸ்தீரணமான 166 காணித் துண்டுகளும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டமைக்காக வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ஒரு பகுதி மாத்திரமே கையேற்கப்பட்டிருந்தது.

**(ஆ) அனுமதிப்பத்திரம் வழங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் சுற்றுலாப் பயணிகளுக்காக நடாத்தப்படும் சிற்றுண்டிச் சாலை மற்றும் விடுதிகளுக்கு பணம் அறவிடப்பட்டு விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் அச்சிடப்படுகையில் தொடர் இலக்கமும் அடிக்கட்டையுடன் அவை அச்சிடப்பட்டிருக்கவில்லை. இந்த அனுமதிப்பத்திரங்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கல் தொடர்பாக போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்கும் வகையில் முகாமைத்துவம் போதிய உள்ளகக் கட்டுப்பாடை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ii) சுற்றுலா வழிகாட்டுனர்களுக்காக அதிகாரசபையால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களில் கையொப்பமிடும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் திகதி உள்ளடக்கப்படும் வகையில் உத்தியோகபூர்வ முத்திரை பயன்படுத்தப்படாது கையொப்பம் மாத்திரம் அனுமதிப்பத்திரத்தில் பதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த அனுமதிப்பத்திர விநியோகம் தவறான பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்கு முகாமைத்துவம் போதிய கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

## 3.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

ரூபா 5,934,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பஸ் வண்டி பின்னர் ரூபா 2,667,929 தொகைக்கு பழுதுபார்க்கப்பட்டு 2012 யூன் மாதத்திலிருந்து ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பிபில, ராகல, ஹொறவபதான, மஹியங்கனை, வீரகெடிய, பத்துலுஓயா மற்றும் நிகவெரடிய போன்ற பிரதேசங்களில் 7 விடுமுறை விடுதிகளுக்காக தற்போது 2 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 2.1 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது. எனினும், இந்த விடுதிகள் ஆக்கபூர்வமான முறையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் கொழும்பில் அமைந்துள்ள கலாச்சார நிலையக் கட்டிடங்களின் (Ductch Hospital) பெறுமானத்தேய்வு கழித்த பெறுமதி ரூபா 7,274,715 குறைவாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதான களஞ்சியத்தில் 13 பொருட்கள் தொடர்பாக அப் பொருட்களின் குறிக்கப்பட்ட விலையைப் பார்க்கிலும் கூடுதல் விலை செலுத்தி பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமையால் அதிகாரசபைக்கு ரூபா 133,138 தொகை நட்டமேற்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பாசிக்குடா சுற்றுலா விடுதிச் செயற்திட்டத்தின் மழை நீர் வழிந்தோடும் கால்வாய் முறைமையை நிர்மாணித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) நிர்மாணிப்புச் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் நிலத்தின் பிணக்குகளைக் கருத்திற்கொண்டு அளவைத் திட்டங்களும் மாதிரியும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் இச் செயற்திட்டத்தின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்டிருந்ததுடன் அவரால் இச் செயற்திட்டத்திற்கான ரூபா 31,394,813 தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தப்பட்டிருந்தன. இவ்வாறே இப் பணிப்பாளரின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய விடுதி உத்தியோகத்தரால் மேற்குறித்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கான கணக்கறிக்கையும் கொடுப்பனவு விலைப்பட்டியல்களும் பரீட்சிக்கப்பட்டு சான்றுபடுத்தி கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. உத்தியோகத்தர்களுக்கு அச் செயற்பாடுகளுக்காக உள்ள தொழிற் திறனும் சுதந்திரத்தன்மையும் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

## 3.7 செயற்திட்ட தாமதங்கள்

4,000 மேலதிக அறைகளுடனான விடுதிகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் ரூபா 5,521 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கல்பிட்டி ஒருங்கிணைந்த சுற்றுலா செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்பிட்டி ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டத்தைச் செயற்படுத்தி 5 வருடங்களுக்குள் பூர்த்திசெய்வதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரமும் திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரமும் 2008 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2012 திசெம்பர் 31

ஆம் திகதி வரை ஒரு அறையேனும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கற் திட்டமும் செயற்திட்டத்தின் முகாமைத்துவச் செலவினமும், ஆலோசனை மற்றும் மூலதன வேலை போன்றவை உள்ளடங்கும் வகையில் விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இச்செயற்திட்டத்தின் கீழ் 14 காணிகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை முதலீட்டாளர்களுக்கு 4 காணித்துண்டுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி சேவைகள் 31 பதவிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு 192 பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 154 மற்றும் 176 ஆகக் காணப்பட்டன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

2012 முதல் 2016 ஆம் ஆண்டுவரையான 4 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்களுக்காக இலக்குகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் எய்தப்பட வேண்டிய இலக்குகள் கால ஒழுங்கில் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டுத்திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச் செயற்பாட்டுத் திட்டத்தில் கால எல்லைகள் குறிப்பிடப்பட்டிராததுடன் செயற்பாட்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும் செயல் முன்னேற்றத்தைக் கால ஒழுங்கில் பரீட்சிப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்களுடனான முரண்களின் வீச்சு 20 சதவீதத்தினை மிகைத்து 20 செலவின விடயங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமையை காணமுடியவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
(இ) செயற்திட்ட முகாமைத்துவம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
(ஊ) அனுமதிப்பத்திர வழங்கல்